www.Padasalai.Net www.TrbTnpsc.com

VILLUPURAM DIST

வகுப்பு : 10

தேர்வு எண் | | | | | | |

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024-25

## தமிழ்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்புகள் : i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I (மதிப்பெண்கள்:15)

குறிப்புகள்: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினைச் சேர்த்து எழுதவும்.

15X1=15

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக.

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது -------
அ) வணிகக்கப்பல்களும் ஐம்பெரும்காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும்கலன்களும்
இ) ஐம்பெரும்காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக்கப்பல்களும் அணிகலன்களும்

2. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ------
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

3. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.
அ) கொண்டல் – 1. மேற்கு
ஆ) கோடை – 2. தெற்கு
இ) வாடை – 3. கிழக்கு
ஈ) தென்றல் – 4. வடக்கு
அ) 1,2,3,4 ஆ) 3,1,4,2 இ) 4,3,2,1 ஈ) 3,4,1,2

4. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

5. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' – யாரிடம் யார் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

6. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

7. அருந்துணை என்பதைப் பிரித்தால் ------
அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருந்து + உணை ஈ) அருமை + உணை

8. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி, மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

9. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ----------
அ) முல்லை, குறிஞ்சி, மருதம் நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

10. தமர் – பொருள் தருக.
அ) பண்பாளர் ஆ) பகைவர் இ) விரும்பப்படாதவர் ஈ) உறவினர்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

11. வாரா – இலக்கணக்குறிப்பு தருக.

அ) அடுக்குத்தொடர் ஆ) வினைத்தொகை

இ) பண்புத்தொகை ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (12,13,14,15)

*"மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை*
*மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா:*
*இலைகளின் மீதும், நீரலைகளின்மீதும் உராய்ந்து, மிகுந்த*
*ப்ராண்–ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு."*

12. இப்பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல் எது?

அ) கம்பராமாயணம் ஆ) சிலப்பதிகாரம் இ) காற்றே வா ஈ) காலக்கணிதம்

13. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) இளங்கோவடிகள் ஈ) கண்ணதாசன்

14. மயலுறுத்து – பொருள் தருக.

அ) மகிழச்செய் ஆ) வணங்கச்செய் இ) மயங்கச்செய் ஈ) நினைக்கச்செய்

15. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிமோனைச் சொற்கள்

அ) மகரந்தத் – மனத்தை ஆ) மகரந்தத் – மயலுறுத்து

இ) மனத்தை – மயலுறுத்து ஈ) கொண்டு – கொடு

## பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **4X2=8**

16. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப் பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பலதாறு வாழைப் பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப் பழங்கள் உள்ளன. – மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரில் உள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

17. விடைகளுக்கேற்ற வினா அமைக்க.

அ) நல்ல மொழிப்பெயர்ப்பாளன் சில மொழி மீறல்களைச் செய்வான்.

ஆ) எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்ட அதன்மீது அளவற்ற நம்பிக்கை கொண்டவர் கலைஞர்.

18. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

19. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

20. "கரப்பிடும்பை இல்லார்" – இத்தொடரின் பொருள் கூறுக.

21. "கண்" என முடியும் திருக்குறளைப் பிழையின்றி எழுதுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5X2=10**

22. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடர் ஆகும்?

23. எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.

அ) எறும்பு தன் கையால் எண்சாண்

ஆ) ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி.

24. வருக – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25. பழமொழிகளை நிறைவு செய்க.

அ) ஒரு பானை ---------. ஆ) அளவுக்கு ---------.

26. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

அ) கொடு – கோடு ஆ) விதி – வீதி

27. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.

அ) இன்சொல் ஆ) மலை வாழ்வார்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

28. கலைச்சொல் தருக.

அ) Conversation ஆ) Consonant

பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2X3=6

29. உரைப்பத்தியைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தில் கருதுகின்றனர். உறவினர் வேறு. விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால்தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

வினாக்கள்:

அ) விருந்தினர் என்போர் யாவர்?

ஆ) விருந்து குறித்து தொல்காப்பியர் கூறியது யாது?

இ) இவ்வுரைப் பத்திக்கு பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

30. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்........ முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு நீர் தன்னைப் பற்றி பேசினால் கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

31. தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2X3=6

வினா எண் 34–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33. வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

34. அ) 'வெய்யோனொளி' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலைப் பிழையின்றி எழுதுக. (அல்லது)

ஆ) 'சிறுதாம்பு' எனத் தொடங்கும் முல்லைப்பாட்டுப் பாடலைப் பிழையின்றி எழுதுக.

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2X3=6

35. அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது பிறந்தது, பிறவாதது இவை அனைத்தையும் யாம் அறிவோம். அது பற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். – இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

36. 'வேலொடு நின்றான் இடுவென் றது போலும்
கோலொடு நின்றான் இரவு' – இக்குறளில் வரும் அணியினைச் சுட்டி விளக்கம் தருக.

37. 'முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்' – இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5X5=25

38. அ) மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

(அல்லது)

ஆ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

39. அ) மாநில அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

(அல்லது)

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. நிறைமதி என்பவர் விழுப்புரம் மாவட்டம் நெடி ஊரில் உள்ள கிளை நூலகத்தில் உறுப்பினராகச் சேர்வதற்குச் சென்றுள்ளார். தேர்வர் தன்னை நிறைமதியாகப் பாவித்து, கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தினை நிரப்புக.

42. அ) புயலின்போது செயல்படுத்த வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பலவற்றுள், ஐந்தினை எழுதுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

பகுதி – V (மதிப்பெண்கள் – 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3X8=24

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரை குறிப்புகளை எழுதுக. (அல்லது)

ஆ) நிகழ்கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் – அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழமையும் – இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் – அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன – இவை குறித்து நாளிதழ் ஒன்றின் தலையங்கம் எழுதுக.

44. அ) உரைநடையின் அணிநலன்களை உம் சொந்த நடையில் எழுதுக. (அல்லது)

ஆ) 'உனக்குப் படிக்கத் தெரியாது' என்னும் தொடர் மேரிஜேன் வாழ்வில் ஏற்படுத்திய மாற்றத்தினைப் 'புதிய நம்பிக்கை' என்னும் சிறுகதையின் வழிநின்று விளக்குக.

45. அ) குமரிக்கடல் முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ்த்தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில் சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து அந்தாதி கூறி, கோவை அணிவித்து சிற்றிலக்கியங்களை எல்லாம் அணியாகப் பூட்டி, அழகு கூட்டி அகம்மிக மகிழ்ந்தனர். செந்நாப்புலவர்கள். – இக்கருத்தைக் கருவாகக் கொண்டு சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக. (அல்லது)

ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
(குறிப்புகள் : முன்னுரை, நீரின்றி இயங்காது உலகம், நீர்ப்பற்றாக்குறைக்குக் காரணம், சேமிக்கும் முறைகள், மழைநீர் சேகரிப்புத் தொட்டி, மழைநீரின் பயன்கள், மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்! – முடிவுரை.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

41. 

# நூலக உறுப்பினர் படிவம்

______ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ______

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் :

உறுப்பினர் எண் [ ]

1. பெயர் ______
2. தந்தை பெயர் ______
3. பிறந்த தேதி ______
4. வயது ______
5. படிப்பு ______
6. தொலைபேசி எண் ______
7. முகவரி ______
   (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) ______

நான் ______ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ ______ சந்தா தொகை ரூ ______ ஆக மொத்தம் ரூ ______ ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் :

தங்கள் உண்மையுள்ள

திரு / திருமதி / செல்வி / செல்வன் ______ அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்

பிணைப்பாளர்

அலுவலக முத்திரை

கையொப்பம்

(பதவி மற்றும்

அலுவலகம்)

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com